**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Manikandan |
| P.W. | : 1 |
| Father Name | : Subbaiyan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசிக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி சுப்புராஜை தெரியும் அவரது வீட்டில் தான் வேலை செய்து வந்தோம். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை சனிக்கிழமை காலை 11.00 மணி அளவில் கொமரலிங்கத்தில் சுப்புராஜ் வீட்டில் கட்டிட வேலை செய்து வந்த சமயத்தில் சாமான்கள் மேலே ஏற்றிக்கொண்டு இருந்தேன் அப்போது பீம் ஒடிந்து கீழே விழுந்து விட்டது அதில் கீழே இருந்த ஆஜர் எதிரி சுப்புராஜ் மற்றும் பிரகலாதன் என்கிற பையன் அடியில் சிக்கி விட்டார்கள் நானும் கீழே விழுந்தேன். எனக்கு நெஞ்சில் அடிபட்டது காலில் காயம் ஏற்பட்டது. பிரகலாதனுக்கு காலில் அடிபட்டது முறிந்தது ஆஜர் எதிரிக்கும் காலில் அடிப்பட்டது. நானும், பிரகலாதனும் ஒரு வண்டியில் உடுமலைப்பேட்டை கணேஷ் மருத்துவமனைக்கு சென்றோம். சுப்புராஜ் தனியாக முன்னால் சென்றுவிட்டார். நான் ஒரு நாள் சிகிச்சை பெற்றேன். பிரகலாதன் கை, கால் முறிந்ததால் கோவைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்து விட்டேன். அன்றைய தினம் மாலை பிரகலாதன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான்

மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) போலீசார் எழுதியிருந்ததில் நான் கையெழுத்து போட்டேன் எனக்கு எதுவும் தெரியாது. நடந்த சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சம்மந்தம் இல்லை நான் மேலே இருந்தேன் அவர் கீழே இருந்தார்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Nandhini |
| P.W. | : 2 |
| Spouse Name | : Pragalathan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசிக்கிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி சுப்புராஜை தெரியும். **28.01.2023** ம் தேதி சுமார் காலை **11.15** மணிக்கு கொமரலிங்கத்தில் சுப்புராஜ் என்பவரது பழைய கடையை ஆல்ட்ரேசன் செய்ய கட்டிட வேலைக்கு எனது கணவர் பிரகலாதன் சென்றார். வேலைக்கு சென்ற இடத்தில் லாப்ட் கான்கிரீட் இருந்தது அதை **10** நாளில் எடுக்க வேண்டும் என்று ஓனர் சுப்புராஜ் சொன்னதால் எனது கணவர் எடுத்துள்ளார். எடுத்ததும் அது அவர் மேலே விழுந்துவிட்டது. அவரது வலது கால் நசுங்கிவிட்டது. அப்போது வீட்டில் இருந்து எனக்கு எனது அப்பா துரைசாமி தகவல் சொன்னார். உடுமலை கணேஷ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக சொன்னதன் பேரில் நான் அங்கு சென்றேன். அங்கிருந்து கங்கா மருத்துவமனைக்கு

கொண்டு செல்ல சொல்லிவிட்டார்கள். அங்கு அழைத்துச் சென்றோம். எனது கணவர் மாலை 04.30 மணி அளவில் இறந்துவிட்டார். போலீசார் மருத்துவமனையில் வந்து பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இ ருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இருந்து எனது கணவரை எப்போது சென்று பார்த்தேன் என்றால் சுமார் 12.00 மணி அளவில் பார்த்தேன் அப்போது அவர் எங்கு இருந்தார் என்றால் உடுமலை மருத்துவமனையில் இருந்தார். அவசர சிகிச்சை பிரிவில் இருந்தாரா என்றால் இல்லை என்னிடம் பேசினாரா என்றால் பேசினார். எனது கணவர் எத்தனை வருடமாக கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் எங்களது திருமணம் நடைபெறுவதற்கு முன்பிருந்தே செய்து வருகிறர். குறிப்பிட்டு எத்தனை வருடம் என்று தெரியாது. எனது கணவர் சுமார் 20 வருடங்களாக செய்து வந்திருப்பார் என்றால் அதற்கு மேலே இருக்கும். அவருக்கு கட்டிட வேலை நன்கு தெரியும் என்றால் சரிதான்.

(2) பொதுவாக ஈரமான சுவற்றில் கட்டிட ஆட்கள் வேலை செய்ய மாட்டார்கள் என்றால் சரிதான். லாப்ட் 10 நாளில் பிரிக்கச் சொன்னது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் எனது கணவர் உடுமலை மருத்துவமனையில் இருக்கும் போது என்னிடம் சொன்னார். 10 நாளே ஆன லாப்டை பிரித்தால் விபத்து ஏற்படும் என்று எனது கணவருக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் சுப்புராஜிடம் தான் வேலை செய்தார் என்பதை காட்ட சம்பள பில் எதுவும் நீதிமன்றத்தில் காட்ட முடியுமா என்றால் முடியாது. வேறு ஆதாரங்கள் உள்ளதா என்றால் இல்லை. ஆஜர் எதிரியை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல ஓனர் சொன்னதால் தான் எனது கணவர் லாப்டை எடுத்தார். எனது கணவர் சுப்புராஜிடம் தான் வேலை செய்தார் என்று காட்ட ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

**நீதிமன்ற கேள்வி**

**1.** கேள்வி – எனது கணவர் எதிரியிடம் தான் வேலை செய்தார் என்பதை காட்ட ஆவணங்கள் என்னிடம் உள்ளதா ?

பதில் – எனது கணவர் நோட்டில் எழுதி வைத்துள்ளார்.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Vairaperumal |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசிக்கிறேன். முன்பு கட்டி வேலை செய்து வந்தேன் தற்போது விவசாயம் பார்க்கிறேன். ஆஜர் எதிரி சுப்புராஜை தெரியும். அவர் கொமரலிங்கத்தைச் சேர்ந்தவர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு 1 வது மாதம் 28 ம் தேதி தமிழ் தை மாதம் எனது மாமனார் துரைசாமி, மணிகண்டன், பிரகலாதன் மற்றும் ஒரு மம்பட்டி ஆள் சுப்புராஜ் என்பவரது கடை வேலை சம்மந்தமாக வேலை செய்து வந்தார்கள். எனது மாமனார் காலை சுமார் 11.00–11.15 மணி அளவில் எனக்கு போன் செய்து தம்பி பிரகலாதன் கட்டிடத்தில் சென்டரிங் கீழே விழுந்து கால் நசுங்கிவிட்டது சீக்கிரம் வாடா என்று சொன்னார். நான் போவதற்குள் உடுமலைப்பேட்டை கணேஷ் எலும்பு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். நான் அங்கு சென்றேன். அவருக்கு வலது கால் நசுங்கியிருந்தது நெஞ்சில் நல்ல அடிபட்டிருந்தது. நான்அவரிடம் என்னடா தம்பி பார்த்து செய்வதில்லையா என்று சொன்னேன் அதற்கு அவர் நான் சொன்னேன் வீட்டுக்காரர் புன்னியோஜனை செய்து தனது அக்கா வீட்டிற்கு அவசரமாக கொடுக்க வேண்டும் என்று மடாரென்று வேலையை சீக்கிரம் முடித்து கொடுக்கச் சொன்னதால் அவரது பேச்சைக் கேட்டு நான்

ஆட்களை விட்டு வேலை செய்ய சொன்னேன் என்று சொன்னார். கலவை போடுவதற்காக முட்டை பிரித்துள்ளார்கள் சென்டரிங் கீழே அவர் காலில் விழுந்துள்ளது. மேலே மணிகண்டன் என்பவர் வேலை செய்து வந்தார் அவரும் கீழே விழுந்துவிட்டார் அவருக்கு என்ன ஆனது என்று பார்க்கச் சொன்னார். மணிகண்டனை பார்த்தேன். அவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கும் வலது கால் பக்கத்தில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்திருந்தது. வீட்டுக்காரர் சுப்புராஜ்க்கும் அடிப்பட்டிருந்தது அவர் முதலுதவி செய்து விட்டு கோவைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டார். மம்பட்டி ஆள் மற்றும் மாமனாருக்கு காயம் ஏற்படவில்லை. இங்கே ஆகாது என்று எனது தம்பி கோவைக்கு அழைத்துச் செல்லச் சொன்னார்கள். செல்லும் போது நாடித் துடிப்பு இருந்தது பின்பு குறைந்துவிட்டது. மருத்துவமனையில் மாலை சுமார் 04.00–04.30 மணி அளவில் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக அவருடன் வேலை செய்த மணிகண்டன் புகார் கொடுத்தார். பிரேதத்தை உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். மறு நாள் காலை சுமார் 09.00 மணி அளவில் போலீசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை (No Cross) என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M
Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Rajaraman |
| P.W. | : 4 |
| Father Name | : Nataraj |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் அவல் சின்னம்பாளையத்தில் வசிக்கிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். இறந்து போன பிரகலாதன் எனக்கு அண்ணன் முறை. எனது மனைவியின் அக்கா கணவர். 28.01.2023 ம் தேதி நான் கோவையில் வண்டி ஓட்டிக் கொண்டிருந்த போது எனது மனைவி எனக்கு போன் செய்து பிரகலாதனுக்கு அடிபட்டதாக சொன்னார்கள். உடுமலைப்பேட்டை என்று சொன்னார்கள் நான் உடுமலைப்பேட்டை வருவதற்குள் கோவைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் நேராக கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்றேன். எனது அண்ணி மற்றும் எனது மனைவியிடம் கேட்ட போது கொழுமத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது கான்கிரீட் சைட் பீம் விழுந்துவிட்டதாக சொன்னார்கள். பிரகலாதனுக்கு வலது காலில் அடிபட்டிருந்தது. நான் பார்க்கும் போது அவருக்கு உயில் இல்லை. கங்கா மருத்துவமனையில் பிணவறையில் வைத்திருந்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரகலாதனின் மனைவி தான் எனக்கு சம்பவம் பற்றி சொன்னார் என்றால் முதலில் எனது மனைவி சொன்னார் பின்பு நான் எனது அண்ணி பிரகலாதனின் மனைவிக்கு கால் செய்து கேட்டேன். பிரகலாதனுக்கு எங்கு அடிப்பட்டிருந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல நான் பார்த்தேன். நான் உறவினர் என்ற முறையில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Duraisamy |
| P.W. | : 5 |
| Father Name | : Vellaisamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மாவட்டம் சிந்திலவேடம்பட்டியில் வசிக்கிறேன். கட்டிட வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் கொமரலிங்கத்தைச் சேர்ந்த கடைக்காரர். தேதி சரியாக தெரியவில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான், மணி, முருகானந்தம் கொமரலிங்கத்தில் கடை வேலை செய்து வந்த போது லாப்ட் கீழே விழுந்தது நான் அப்போது உள்ளே இருந்தேன். விழுந்த பின்பு வெளியே வந்து பார்த்தேன் லாப்ட் விழுந்து பிரகாலதனுக்கு காலில் அடிபட்டிருந்தது அதன் பின்பு உடுமலைப்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கிருந்து கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பிரகலாதனுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள் அதன் பின்பு இறந்துவிட்டார். எனது மகள் நந்தினிக்கு நான் தகவல் சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் நான் உள்ளே

வேலை செய்து கொண்டிருந்தேன். சம்பவத்திற்கு ஆஜர் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது மருமகன் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 26/2024 |
| Name | : Muruganandam |
| P.W. | : 6 |
| Father Name | : Mariappan |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**05.05.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொழுமம் குப்பம்பாளையத்தில் வசிக்கிறேன். மேசன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி சுப்புராஜை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு மணி என்பவர் என்னை வேலைக்கு கூப்பிட்டு வந்தார் நான் அவருடன் தான் வேலை செய்வேன். கொமரலிங்கத்தில் உள்ள சுப்புராஜ் என்பவர் கட்டிடத்திற்கு வேலைக்கு சென்றோம். பொருட்களை எடுத்து வைத்து மேலே ஏற்றிக்கொண்டிருந்தோம். உள்ளே கீழே கலவை கலப்பதற்காக நானும், பிரகலாதனின் மாமனாரும் சிமெண்ட் மற்றும் மண் போட்டு கலக்கிக் கொண்டிருந்தோம். தண்ணீர் வேண்டும் என்பதற்காக நான் உள்ளே சென்றேன். 10 நிமிடம் கழித்து வெளியே வந்து பார்த்த போது லாப்ட் கீழே விழுந்து கிடந்தது. சுப்புராஜ்க்கு அடிபட்டிருந்தது. பிரகலாதனை போட்டு அமுத்திவிட்டது. அக்கம், பக்கத்தில் இருப்பவர்கள் வந்து அவரை வெளியே இழுத்து வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். சிறிது நேரம் கழித்து நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிரகலாதன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1)சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் நான் உள்ளே இருந்தேன் நேரடியாக தெரியாது. ஆஜர் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.05.05 17:15:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்